முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1125

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.10.2022, வெள்ளிக்கிழமை

1. தர்ம வேலிகொண்ட அரங்கனே
   தவநிலை மிகுந்த தேசிகனே
   ஆறுமுகன் என் அவதாரமே
   அருட்பெருஞ்சோதி சூட்சுமம் கண்ட ராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 11 ம் நாள் 28.10.2022 வெள்ளிக்கிழமை)
   வரமென உமக்கு நித்தம் நித்தம்
   வடிவேலன் அற்புதம் நிகழ்த்தி வர
3. வருகவே உன் கரம்பட தீட்சை
   வையகத்தில் பெறும் மக்களுக்கெல்லாம்
   தருகின்றேன் மகா சூட்சும சக்தி
   தவசித்தியும் இனிதே இணைந்து வழங்கி
4. வழங்கியே ஆறுமுகன் உன்வழி உள்ள
   வையகத்து அன்பர்கள் அனைவருக்கும்
   இணங்கி ஞானவான்கள் ஆகும் வாய்ப்பும்
   இணையில்லாத ஞான ஆட்சிக்கால வாழ்வும் தந்தருள்புரிவேன்
5. அருளவே அரங்கனே உன் தர்மம் உலகை வெல்லும்
   ஆற்றல்மிக்க அரங்கனின் சன்மார்க்கமே இந்த உலகை ஆளும்
   மாற்றம் செய்து அரங்கன் வழி
   வடிவேலன் யானும் மகா சூட்சுமத்தை உலகுக்கு
   அரங்கன் வழி கொள்கையாக அருளி வர
6. வருகின்ற காலம் அரங்கன் தொடர்பில் வையகம் மாற்றம் காணும்
   தருகின்ற அரங்கன் தர்மமே உலகமெங்கும் தழைத்து அற்புதம் நிகழ்த்தும்
   நிகழ்த்தவே அரங்கனை தேடி வர நில உலகம் சடுதி மாற்றங்காணும்
   நிகழ்த்திய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–